கலி தீர்த்த பெருமாள்

"யாரது? சோமுவா? நம்ம சோமுவா? என்னப்பா இது. ஆள் அடையாளமே தெரியவில்லையே! ஒரே அடியாக மாறி விட்டிருக்கிறயே!''

''ஆமாங்க என்ன செய்வது? இந்த ரேஷன் வந்ததிலிருந்து உடம்பு சரியில்லை. போஷாப்பு குறைஞ்சி போகவே, முன்னாலே இருந்த, வயத்துவலி ரொம்ப வேகமாகி, உடம்பைப் பாழ் படுத்திவிட்டது, உடல் இளைச்சாலே, உருமாறித்தானே போகும்.''

''அட பாபமே! முகம் கூடக் கருத்துப்போச்சி''

''எப்பவும் இருப்பதுதானுங்க. நான் எப்பொ சிகப்பா இருந்தேன்!''

''சிகப்பு இல்லைன்னாலும், மாநிறமா இருப்பயே.''

''கவலைதான் எல்லாத்துக்கும் காரணம்.''

''ஆமாம், எதுக்கும், ஏதாவது நல்ல மருந்தா சாப்பிடப்பா பார்க்கும்போதே கஷ்டமா இருக்கு எப்படி இருப்பே. சாண்டோ போலே.''

''குண்டு சோமுன்னுதானே கேலிகூடச் செய்வாங்க என்ன செய்யறதுங்க காலம் மாறிவருவது போல, ஆளும் மாற வேண்டி இருக்கு. மாறாமலே இருக்க முடியுதுங்களா?''

''இருந்தாலும், சோமு! உடம்பு துரும்புத் துரும்பா இளைச்சி இருக்கு. முதலிலே உன்னைப் பார்த்ததும் நிஜமாச் சொல்றேம்பா, எனக்கு ஆள் அடையாளமே தெரியலே. யாரோ புது மனுஷனாத்தான் தெரிஞ்சுது.''

''ஆமாங்க! நேத்து, நம்ப செம்மலையார்கூட அதேத்தான் சொன்னாரு''

''பார்த்தயா செம்மலையானை. எப்படி ஆயிட்டான் பார்த்த? மலையன்னாமலை போலத்தான் இருக்கிறான் இப்பொ''

"ஆமாங்க. உடம்பு கொஞ்சம் கனத்துத்தான் போயிருக்கு."

"கொஞ்சமா! ஆள், ஒரே அடியா, வீங்கிப் போய்க் கிடக்கிறான். இதெல்லாம் சோமு பூரிப்பாலே எற்படுவது. அவனுக்குச் சந்தோஷத்துக்கு மேலே சந்தோஷம் வந்தபடி இருக்கு. வியாபாரத்திலே நல்ல சான்சு, பெண்ணுக்குப் பெரிய இடம். மகன், M.L.A. ஆகிவிட்டான். தம்பி ஒருவன் தறுதலையாத் திரியுமே முன்னே. அவன்கூட அல்லவா இப்ப, ஆயிரமாயிரமா மிலிடரி காண்ட்ராக்ட்லே சம்பாதிக்கிறான்."

"கேள்விப்பட்டேனுங்க. நான் வரட்டுங்களா?"

"செய்யப்பா, உடம்பைப் பார்த்துக்கோ."

உருமாறிவிட்ட சோமுவை, உருக்கமுடன் விசாரித்து, உடம்பைத் தேற்றிக் கொள்ள, தக்க மருந்துண்ணும்படி அன்புரை வழங்கி விட்டு, இல்லம் போகிறார், கந்தசாமி. அவருடைய இல்லம், பெரியதுதான், என்றாலும், விருந்தாளிகள் தாராளமாக நுழைய முடியாது – அம்மையார் அவ்வளவு சுதந்திர தேவி! அதுவேறு விஷயம். நாம், அந்த எழைச் சோமு போகிற பாதையிலே கொஞ்ச தூரம் போகலாம், வேலை இருக்கிறது.

சோமு, தள்ளாடித்தான் நடந்து போகிறான் – குனிந்த தலை நிமிராமல். தெருக்கோடியிலே உள்ள வெற்றிலைப் பாக்குக் கடையருகே நிற்கிற, உயரமான ஒரு ஆசாமி, சோமுவை, முறைத்துப் பார்க்கிறான் – கனைக்கிறான் – காரியும் துப்புகிறானல்லவா. அவனைக் கேட்போம், சோமுவைப் பற்றி. இருங்கள், சோமு, போகட்டும், கொஞ்சம் தொலைவு. போய் விட்டான். இப்போது பேசுவோம், உயரமான ஆளிடம்,

* * * * *

"அண்ணென்! கொஞ்சம் பொட்டி கொடு"

"இல்லைப்பா. தீப்பெட்டித் தேடித் தேடித்தான் திக்கெட்டும் திரிய வேண்டி இருக்கே. எங்கே கிடைக்குது. காலம் கெட்டுப் போச்சு. காலணாவுக்குச் சீரழிந்த தீப்பெட்டி, ஒரணா கொடுத்தாலும், கிடைக்கறதில்லை.

"ஆமாம். எந்தச் சாமானுந்தான் கிடைக்கலே. சோத்துக் கவலையே பெரிசாப் போச்சே இப்பத்தான். அதோ போறாரே ஒரு ஆசாமி, அவர் சொன்னாரு, முன்னே சாண்டோ போல் இருப்பாராம், ரேஷன் அரிசி பிடிக்காமே, பாவம், ஆள் துரும்பாயிட்டாராம்."

''சோமு, அவன் பேர். அவன் சொன்னானா, சோத்துக் குத்தம்னு?''

''ஆமாம்''

''சொல்வான், சொல்வான்.''

''எண்ணே! தப்பு இல்லையே, அவர் சொன்னதிலே. முந்தி...''

''ஆள், முன்போல இல்லை, இளைச்சித்தான் போயிருக்கிறான். ஆனா ரேஷனாலே இல்லைப்பா. அவன் வினை அவனைத் தின்னுது. பய, படுகாளிப் பய. ஊர் சொத்தை மோசம் செய்யறதே வேலை. சாபம் சும்மா விடுமா ஆளைக் கொல்லுது.''

* * * *

உயராமான ஆள் இவ்வளவு கோபமாகப் பேசும்போது, நாம் ஏன் விவாதத்தை வளர்க்க வேண்டும். போவோம். வந்த வேலையுந்தான் முடிந்து விட்டது. சோமு இளைத்ததற்குக் காரணம் அவனுடைய கெட்ட குணமாம் இவர் சொல்வது. அவர் சொன்னார், நல்ல மனுஷன் இளைத்து விட்டார் என்று. ஆள்மாறி இருப்பது மட்டும், இருவரும் ஒப்புக் கொள்வதுதான். காரணம் கூறுவதிலேதான், பேதம். இவருக்கு என்னமோ கோபம் சோமு மீது. அவருக்கு அன்புடன் பேசுகிற சுபாவம். உண்மையான காரணம் என்னவோ? கேட்பானேன் போய்த்தான் பார்ப்போமே, சோமு வீட்டுக்கு, கொஞ்சம் வேகமாக நடந்தால் அவனைப் பிடித்து விடலாம். அவன்தான் தள்ளாடிக் கொண்டு போகிறானே. பார்த்தீர்களா, நான் சொன்னது சரியாகப் போச்சி, அதோ போகிறான் ஆசாமி, தொடர்ந்து போகலாம், சாதாரணமாக நடந்தாலே போதும்.

* * * *

அடடே! இதுதான் இவன் வீடா! சேச்சே! ரொம்பக் கேவலாமா இருக்கு. சரிந்து போயிருக்கு சுவரு. சாக்கடையாக இருக்கு வாசல்பக்கம். கூரை மீது குரங்குகள் கூத்தாடுகின்றன. உள்ளே அழுகைச் சத்தம் – குழந்தைகளா இதுகள் இப்படிக் கூவுகின்றனவே! அடபாபமே! அந்த அம்மா, ஏன் இப்படிக் குழந்தைகளைப் போட்டு அடித்துத் துன்புறுத்துகிறார்கள். அதனாலேதான் குழந்தைகள் இப்படி அழுகின்றன.

குழந்தைகளைக் கொடுமைப்படுத்துகிற பொம்பளைகளைச் சும்மா விடக்கூடாது சார்! கேட்கவேணும், ஏம்மா! நீ என்ன மனுஷிதானான்னு கண்டிக்க வேணும். ஆமாம், அதோ, சோமு, என்னமோ வாய் திறக்கிறான் மனுஷன் நல்லவனாச்சே, கேட்காமலா இருப்பான், இந்த அனியாயம் உண்டான்னு.

* * * *

''ஏண்டி முனியம்மா, இத்தனைப் பாடுபடுகிறே. எக்கேடாச்சும் கெடட்டும்னு அந்தச் சனியன்களை விட்டுத் தொலை. உனக்கு இருக்கிற கஷ்டத்தோடு கஷ்டமாக இதுக வேறு. விடு, விடு அது அது ஆடி அழியட்டும்.''

* * * *

என்ன சார் அனியாயம்! சோமு, குழந்தைகளை அடிக்கிறதன் மனைவிக்குப் பரிந்து பேசுகிறானே. சனியன்! தொலையட்டும்! அழியட்டும்! – குழந்தைகளை இப்படியா இவனும்கூடச் சேர்ந்து திட்டவேணும்? செச்சே! என்னா மனமய்யா இவனுக்கு. இந்தக் கண்றாவியை நாம் பார்க்க வேண்டாம், வாங்க போகலாம் வெளியே. வீடு வேறு ஒரே நாற்றம். ஈயும் எறும்பும், வண்டும், பாசியுமா இருக்கு வீடா இது, மாட்டுக் கொட்டகைகூட இதைவிட மேலாக இருக்கும்.

* * * *

சார்! அந்தப் ''பொம்பளை'' குடம் தூக்கிக்கிட்டு வருகிறா பாருங்கோ. ஆமா, அந்த முரட்டுச் சுபாவக்காரிதான். கேட்கலாம் சார், ஏம்மா குழந்தைகளை அப்படி அடிக்கிறேன்னு. கேட்டுத் தான் பார்ப்பமே. நம்மை விழுங்கியா விடுவாங்க நாம்ப என்ன குழந்தைகளா?

* * * *

''ஏம்மா! குழந்தைகளைப் போட்டு ஏன் அப்படி அடிக்கிறிங்க. கத்துதுங்களே''

''கத்தும், காட்டு மிருகம் போலே. ஏன் ஐயா! அடிக்காமே என்ன செய்ய? காலையிலே யிருந்து அதுக செய்யற ரகளை, அடங்கலே!''

''என்ன செய்யுதுங்க?''

''என்னான்னு சொல்றது. ஏழை வீட்டுக் குழந்தைகளுக்கு எதைக் கண்டாலும் வாங்க வேணும்னு ஆசை வருது.

காலையிலே ஒரு பாவி 'ஊதுகோல்' ஒன்றை வைச்சி, வித்துட்டு இருந்தான். வீட்டு எதிரிலேயே கும்பல் சேர்த்துக் கிட்டான். பசங்க வாங்கினாங்க. இருக்கப்பட்டவங்க வாங்கினாங்க. இதுக, உயிரை வாங்குதுங்க அப்ப இருந்து.''

''ஒண்ணு வாங்கித் தொலைத்து விடணும். குழந்தை தானே''

''ஒண்ணு போதுமா? கால் டஜன் இருக்கே''

''சமாதானம் சொல்லணும்மா குழந்தைக என்னத்தைக் கண்டுதுங்க,''

''குழந்தைக, மட்டுமா பெரியவங்க கூடத்தான் என்னத்தைக் கண்டாங்கப்பா? உனக்குத்தான் என்னா தெரிஞ்சுது? எங்க குடும்ப நிலை தெரிந்தா, ஊதுகோல் ஏன் வாங்கிக் கொடுக்கலேனு கேட்பயா நீ! வயிறாரச் சோறு இல்லை, அந்த வாலில்லாக் குரங்குகளுக்கு ஊது குழல் வாங்க வேணும்னு சொல்றே. உன்னிடம் பேசுவானேன்! குடம் ரொம்புமா பேசினா? நான் போகிறேம்பா.''

* * * *

''தப்பினோம் சார்! கேட்டீர்களா, அந்த அம்மா, பட படன்னு பேசற பேச்சை, நம்மையே இந்தப் பாடுபடுத்தறாங்களே குழந்தைகளை சும்மாவா விடுவாங்க. பொல்லாத பொம்பளே.''

''அடே! இந்தப் பொம்பளையைக்கூட நல்லவன்னு பேசறாரே இந்தப்பெரியவர், காதிலே விழுதேல்லோ, அவங்க பேசறது.

* * * *

''என்னம்மா செய்யலாம். இந்தக் காலமே இப்படித்தான் இருக்கு. நல்லவங்களுக்கு நாலாவிதத்திலேயும் கஷ்டம் வருது. உன் தங்கமான குணத்துக்கு, இப்படித் தரித்திரம் பிடுங்கித் தின்னலாமா! தலை அரட்டலுங்க தலைப்பா மாத்திங்க, இதுக ளெல்லாம் கூடச் சுகப்பட்டுப்போச்சி. உன் புருஷன் உருமாறிப் போனாரு, உனக்கும் கஷ்டம். இப்படி மலை மலையா வருது, என்ன செய்யலாம்.''

''ஐயோ பாவம்! சார்! இந்தப் பெரியவர் பேசினதைக் கேட்டிங்களா? ரொம்ப நல்ல பொம்பளையாம், இவங்க,கஷ்ட காலமாம், தரித்திரமாம், பாவம், அதனாலேதான், இந்த அம்மா

புருஷன் சோமு, இளைச்சி, உருமாறிக் கிடக்கிறான். இந்தத் தங்கமான குணமுள்ள அம்மாவுக்கும் சுபாவமே மாறிவிட்டதாம். பாபம்! ஏழ்மையாலே, என்னென்ன மாறுதல் ஏற்பட்டுப் போகுது பாருங்கள். என்ன செய்யலாம், வாங்கசார், போகலாம். வேகமா நடக்கணும் சார், மணி பனிரண்டு ஆகுது.''

* * * *

அடெ! இந்தத் தெருவிலே எப்ப சார்! பார்க், ஏற்பட்டுது. ரொம்ப ஜோரா இருக்கே. கடியாரம்கூட இருக்கு. ஓ! ரேடியோவும் வைத்திருக்கு. பாருங்க, சார்! பார்க், ஏற்பட்டா, அந்தப் பக்கமே ஒரு அழகாத்தான் இருக்கு. இந்த இடம், முன்னாலே, எப்படி இருக்கும் தெரியுமா? கழுதைகள் கூடிக் கிட்டு கத்துகத்துன்னு கத்திக்கிட்டு இருக்கிற இடம். மழை வந்தா, குளமாயிடும், கழுதைக்கு பதிலா, எருமைகள் புரளும். அப்படிப் பட்ட இடம் இது. மாறியே போச்சி! பூங்காவனமாயிடுத்தே! இந்த மாதிரி, ஊரைச் சீர்திருத்தி அழகு செய்தாத்தானே சார், நல்ல பேர் வரும் முனிசிபாலிடிக்கு. முன்னாலே இருந்த சேர்மன், இதுபோல ஒரு காரியமும் செய்யறதில்லை இவர், பரவாயில்லை, நல்ல வேலை செய்யறார். ஏன் சார்! சிரிக்கிறிங்க, சார்! அடெ! என்ன சார் இது ஒண்ணும் சொல்லாமே சிரிக்கிறிங்களே! எதையோ நினைச்சிக்கிட்டுச் சிரிக்கிறிங்க, என்னிடம் சொல்லக் கூடாதா? என்ன, என்னா! சேர்மன் இருக்கிறாரு ஊரை அழகு படுத்த, ஏழைக வாழ்வைச் சீர்படுத்த யாரு இருக்கறாங்கன்னு சொல்றிங்களா! அது சரி! ஆமாம் சார்! நீங்க சொல்றது நியாயமான பேச்சுதான்! ஊரை அழகுபடுத்துறாங்க, உயர உயரமா கோபுரம் எழுப்புறாங்க, ஆனா, சோமு போலே இருக்கிற ஏழைகளின் வாழ்வு சிதையுதே, அதைத் திருத்தத்தான் ஆளைக் காணோம். அதோ தெரியுது பாருங்கோ, கோயில் கோபுரம், தெற்குப் பக்கமா, அது, உங்க முப்பாட்டனார் கட்டினாராமே, தெரியுமா உங்களுக்கு? அவர் பேரு என்னாங்க? உங்க தாத்தா பேரில்லை, தணிகாசலம் பிள்ளைன்னாதான் பிரசித்தமாச்சே, அந்தக் கோயில் சாமி பேரு! மறந்து போச்சி, என்னமோ செல்வாங்களே, ரொம்ப சக்தி வாய்ந்த சன்னதின்னு ஆமாம். ஆமாம், கலி தீர்த்த பெருமாள்!''

திராவிட நாடு **19-1-1947**

❄ ❄ ❄ ❄ ❄